**O.P.70 of 2024**

Date : 18.02.2026.

ம.சா.1 : கனகமணி

ம.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்

நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.Sc., B.Ed., படித்துள்ளேன். தற்போது என்ன வேலை பார்க்கிறேன் என்றால் வேலை பார்க்கவில்லை. என் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 2 பேர். ஒரு அக்கா மற்றும் ஒரு தம்பி. அக்காவிற்கு திருமணம் ஆகிவிட்டது. தம்பி தனியார் கல்லூரியில் வேலை பார்த்து வருகிறார். என் அப்பா அம்மா விவசாயம் செய்து வருகிறார். என் தம்பிக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. எதிர்மனுதாரர் என் மீது வழக்கு தாக்கல் செய்த காலத்தில் நான் என் அப்பா அம்மா வீட்டில் இருந்தேன் என்றால் சரியல்ல. என் கணவர் வீட்டில்தான் இருந்தேன். எதிர்மனுதாரர் எனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் நான் என் கணவர் வீட்டில் இருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் தாக்கல் செய்த வழக்கில் என் அப்பா அம்மா வீட்டில்தான் எனக்கு சம்மன் சார்பானது என்றால் என் அம்மா அப்பா போனில் என்னை அழைத்து சம்மன் வந்திருப்பதாக சொன்னார். மேலும் சம்மன் சார்பு செய்ய வந்தவர் என்னை தொலை பேசியில் அழைத்ததால் நான் வடக்கு விஜயநாராயணத்தில் சென்று வாங்கினேன். அந்த சமயம் நான் மூலைக்கரைப்பட்டி வித்யாலயா பள்ளியில் வேலையில் இருந்தேன். என்னிடம் காட்டப்படும் மனு என் கணவர் தாக்கல் செய்த வழக்கில் நான் தாக்கல் செய்த இடைக்கால மனு என்றால் சரிதான். அந்த மனுவில் என்னுடைய குடியிருக்கும் முகவரியாக நான் எனது அப்பா அம்மா முகவரியைதான் போட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் M.Sc., எந்த வருடம் முடித்தேன் என்றால் 2018 – 2021ம் வருடத்தில் முடித்தேன். B.Ed., எப்போது முடித்தேன் என்றால் 2013-2014 ல் முடித்தேன். M.Sc., படிப்பு திருமணத்திற்கு பிறகுதான் கல்லூரியில் சேர்ந்து படித்தேன் என்றால் சரிதான். M.Sc., படிப்பிற்கான அனைத்து செலவுகளையும் எனது கணவர்தான் செய்தார் என்றால் சரியல்ல. ஸ்காலர்ஷிப் மூலம் படித்தேன். நான் படித்தது தனியார் கல்லூரி என்றால் சரிதான். அரசு கொடுக்கக்கூடிய ஸ்காலர்ஷிப் பணம் கல்லூரியின் அனைத்துவிதமான செலவிற்கும் பயன்படாது என்றம் ஸ்காலர்ஷிப் போக ஏனைய செலவுகளை எதிர்மனுதாரர் பார்த்துவந்தார் என்றால்

சரியல்ல. திருமணம் முடிந்த எங்கு குடியிருந்து வந்தோம் என்றால் எனது கணவர் வீடான உன்னங்குளத்தில் குடியிருந்து வந்தோம். அதன்பின்பு அந்த வீட்டில் அவரின் சித்தி இருக்கக்கூடாது என்று சொன்னதால் என் அம்மா அப்பா வீட்டில் 8 மாதங்கள் இருந்தோம். நான் எனது பிரமான வாக்குமூலத்தில் பிள்ளையார் குளத்தில் உள்ள எனது பெற்றோர் வீட்டில் நான் மட்டும் வசித்து வந்தததாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் மட்டும்தான் தனியாக வசித்து வந்தேன் என்றாலும் வழக்கிற்காக முன்னுக்கு பின்னாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2018 கால கட்டத்தில் எனது படிப்பிற்காகத்தான் திருநெல்வேலி குடிவந்தேன் என்றால் சரியல்ல. 2018 கால கட்டத்தில் நான் எங்கு குடியிருந்து வந்தேன் என்றால் திருநெல்வேலியில் உள்ள டக்கரம்மாள்புரத்தில் என் கணவருடன் குடியிருந்து வந்தேன். டக்கரம்மாள்புரத்திற்கு வருவதற்கு முன்பு வேறு எங்காவது திருநெல்வேலியில் வசித்து வந்தேனா என்றால் நியாபகம் இல்லை . டக்கரம்மாள்புரம் வருவதற்கு முன்பாக எதிர்மனுதாரர் திருநெல்வேலி சிவந்திபட்டியில் தனி வீடு எடுத்து குடித்தனம் நடத்திவந்தார் என்றால் சரியல்ல. மேற்கண்ட சங்கதிகள் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. திருமணத்தின் பயனாக எங்களுக்கு குழந்தை இல்லை என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு எனக்கு சரியான மாதவிடாய் சுழற்சி இல்லாத காரணத்தினால் குழந்தை பெற்றுக்கொள்வதற்கான சாத்திய கூறுகள் இல்லை என்று திருநெல்வேலி டவுணில் உள்ள காந்திமதி மருத்துவமணையில் மருத்துவசிகிச்சை பெற்றுவந்தேன் என்றால் சரியல்ல. காந்திமதி மருத்துவமணையில் ஒரு வருட காலம் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ பில்கள் எதிர்மனுதாரர் வசம் உள்ள நிலையில் நான் சிகிச்சை பெறவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் குழந்தைக்காக மருத்துவமணைக்கு நான் மட்டும்தான் சென்றேன். அவர் வரவில்லை. மேற்படி காந்திமதி மருத்துவமணைக்குதான் சென்றேன். குழந்தைபேறு இல்லாத காரணத்தினால் இரண்டுபேரும் சிகிச்சை எடுக்க சென்றோம் என்றும் அவருக்கு குழந்தை பிறக்க வாய்ப்பு இருக்கிறது என்றும் எனக்கு குழந்தை பெற்றுகொள்வதற்கு வாய்ப்புகள் இல்லை என்று சொல்லிவிட்டதால் ஒரு வருட காலம் நான் மட்டும் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. சிகிச்சைக்கான முழு செலவும் கிட்டதட்ட ரூ.10 லட்ச ரூபாய் எதிர்மனுதாரர் எனக்காக செலவு செய்தார் என்றால் சரியல்ல. என் அப்பா அம்மாதான் பார்த்தார்கள். என் அப்பா அம்மா எனது மருத்துவ செலவை பார்த்தார்கள்

என்று நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் என் அப்பா அம்மா விவசாய கூலி வேலை பார்க்கிறார்கள் என்றும் மேற்படி ரூ.10 லட்சத்தை அவர்கள் செலவு செய்ய வாய்ப்பே இல்லை என்றால் சரியல்ல. எனது அப்பா விவசாயம் செய்ததால் அந்த பணத்தில் எனக்கு மருத்துவ சிகிச்சை பார்த்தார்கள். ஆனால் ரூ.10 லட்சம் செலவு ஆகவில்லை. ஒருவேளை நான் கூறுவது போல் எதிர்மனுதாரர் எனது மருத்துவ சிகிச்சையை பார்க்காமல் என் அப்பா அம்மா மருத்துவ சிகிச்சை பார்த்திருந்தால் மருத்துவ பில்கள் என் அப்பா அம்மா கைவசம் இருந்திருக்கும் இல்லை என்றால் என் கைவசம் இருந்திருக்கும் என்றால் நான் என் கணவருடன் சேர்ந்திருந்த காலத்தில் மேற்கண்ட பில்கள், நகைகள், ரூம் சாவி போன்றவற்றை எனக்கு தெரியாமல் எடுத்துவிட்டார். மேற்படி மருத்துவ சிகிச்சை எடுத்ததற்கான எந்த விவரமும் எனது பிரமானவாக்குமூலத்திலோ, மனுவிலோ சொல்லவில்லை என்றால் அது தேவையில்லாததால் சொல்லவில்லை. குழந்தை இல்லாத காரணத்தினால் மன நலம் பாதிக்கப்பட்டவர் போல் நான் எதிர்மனுதாரரிடம் பிரச்சனை செய்ய ஆரம்பித்தேன் என்றால் சரியல்ல. திருமண சமயத்தில் எதிர்மனுதாரர் என்ன வேலை பார்த்துவந்தார் என்றால் தற்போது வேலை பார்க்கும் கம்பெனியில் வேலை பார்த்தார். நான் எந்த கால கட்டத்தில் பள்ளியில் வேலை பார்த்தேன் என்றால் என் கணவர் என்னை விட்டு சென்ற சமயத்தில் நான் தனியாக இருந்த காலத்தில் வேலை பார்த்தேன். நான் தனியாக எங்கிருந்தேன் என்றால் என் கணவர் வீட்டில்தான் இருந்தேன். என் கணவர் வீட்டிற்கும் என் அப்பா அம்மா வீட்டிற்கும் எவ்வளவு கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரியாக தெரியவில்லை. இரண்டு பஸ் ஏறி போக வேண்டும். எனக்கு குழந்தை பிறப்பது சம்மந்தமாக நீதிமன்றத்தால் மருத்துவ பரிசோதனைக்கு உத்தரவு பிறப்பித்தால் நான் பரிசோதனைக்கு சம்மதிக்கிறேன் என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் எதிர்மனுதாரர் வீடு கட்ட வேண்டும் என்று கூறியதன் அடிப்படையில் எனது நகைகள், எனது பெற்றோர்கள் நகைகள் , எனது உறவினர்கள் நகைகள் வங்கியில் அடமானம் வைத்து பணம் பெற்றும் கூடுதலாக ரூ.6 லட்சம் எனது தந்தையிடம் இருந்து ரொக்கமாக பெற்றும், எதிர்மனுதாரர் டக்கரம்மாள்புரத்தில் வீடு கிரையம் வாங்கினார் என்று கூறியுள்ள சங்கதிகளுக்கு நான் எந்தஒரு ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆதாரம் எல்லாம் எனது கணவர் எடுத்து வைத்துக்கொண்டார். எனது அப்பா அட்வான்ஸ் கொடுத்த புகைப்படம் என்னிடம் உள்ளது. நான் நகைகள் மற்றும் பணம் கொடுத்ததாகவோ

வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு நிஜமாகவே நான் கொடுத்திருந்தால் அந்த ஆவணங்களை நான் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. 2021 ல் இருந்தே எங்களுக்குள் பிரச்சனை ஆரம்பித்துவிட்டது என்றால் சரியல்ல. சிறிய மனஸ்தாபம்தான் இருந்தது. பெரியவர்கள் பேசி முடித்துவிட்டார்கள். நான்தான் 09.12.2021 ல் நான்குநேரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்ததாக எனது பிரமானவாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். இந்த பிரச்சனைக்கு பிறகுதான் நாங்கள் தனித்தனியாக பிரிந்து வாழ்ந்து வருகிறோம் என்றால் சரியல்ல. நான் என் கணவர் வீட்டில் தனியாக வாழ்கிறேன். என் கணவர் வீடான உன்னங்குளத்தில் அவரின் அப்பா மற்றும் சித்தி மற்றும் சித்தியின் குழந்தை உள்ளனர் என்றால் சரிதான். அதே வீட்டில்தான் நானும் குடியிருந்து வருகிறேன் என்றால் அந்த வீட்டின் பக்கத்தில் தனியாக ஒரு ரூம் கொடுத்தார்கள். அதில் நானும் எனது கணவரும் தனியாக வாழ்ந்து வந்தோம். தற்போது அந்தரூமில் நான் தனியாக வாழ்ந்து வருகிறேன். கல்யாணம்முடிந்து உன்னங்குளத்தில் எத்தனை மாதங்கள் குடியிருந்து வந்தோம் என்றால் சுமாராக 3 மாத காலம் குடியிருந்து வந்தோம். அதற்குபின்னிட்டு நாங்கள் உன்னங்குளத்தில் சேர்ந்து வாழவில்லை என்றால் சேர்ந்து வாழ்ந்தோம். 3 மாதத்திற்கு பிறகு உன்னங்குளத்தில் சேர்ந்து வாழ்ந்ததாக இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. திருமணம் முடிந்து 3 மாத காலம் உன்னங்குளத்தில் வாழ்ந்த பிறகு எங்களது குடியிருப்பை திருநெல்வேலிக்கு மாற்றினோம் என்றால் 8 மாதம் எங்களது அப்பா அம்மா வீடான பிள்ளையார் குளத்தில் வாழ்ந்தோம். பின்பு திருநெல்வேலி டக்கரம்மாள்புரத்திற்கு சென்றோம். தற்போதும் நான் அதே பள்ளியில் வேலை பார்க்கிறேன் என்றும் வழக்கிற்காக வேலை பார்க்கவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் பிரிந்து இருந்த காலத்தில் நான் வேலை பார்த்த பள்ளியில் பிரச்சனை செய்தது சம்மந்தமாக புகார் மனு கொடுத்துள்ளேனா என்றால் கொடுக்கவில்லை. அவ்வாறு ஒரு சம்பவம் நடக்காததால்தான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் சிறு வயது முதலே அவரின் பாட்டியின் பராமரிப்பில்தான் வளர்ந்து வந்தார் என்ற விவரம் எதுவும் தெரியுமா என்றால் தெரியாது. அப்பா அம்மாவுடன் இருப்பதாகத்தான் சொன்னார். எங்கள் திருமணத்தின் போதே எதிர்மனுதாரரின் அப்பாவிற்கு இரண்டாவது திருமணம் நடந்து குழந்தை உள்ளது என்றால் சரிதான். நான் டக்கரம்மாள்புரத்தில் இருந்த போதுதான் மருத்துவசிகிச்சை செய்து வந்தேன் என்றால் சரிதான். 2021 ல் நான்

புகார் கொடுக்கும் போது எதிர்மனுதாரர் டக்கரம்மாள்புரத்தில் குடியிருந்து வந்தார் என்றால் எனக்கு நியாபகம் இல்லை. எனக்கு குழந்தை பேறு இல்லாததால் தற்கொலை செய்துகொள்வேன் என்று எதிர்மனுதாரரை தொடர்ந்து மிரட்டி அவருடன் வாழ மறுத்ததுதான் பிரச்சனைக்கு காரணம் என்றால் சரியல்ல. என்னுடன் பிறந்த தம்பிக்கு இன்னும் திருமணம் ஆகாத நிலையில் எதிர்மனுதாரருக்கு நகை பணம் கொடுத்ததாக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தனது சுய சம்பாத்தியத்தில் அவரது பெயரில் கடன் பெற்று டக்கரம்மாள்புரத்தில் உள்ள இடத்தை தனது பெயரில் கிரையமாக வாங்கினார் என்றால் சரியல்ல. என் அப்பா அம்மா குடும்ப தேவைக்காக நான் அடகு வைத்த நகைகளுக்கு இன்று வரை எதிர்மனுதாரர் வட்டி கட்டி வருகிறார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரிடம் எந்த பொருளும் இல்லை என்றும் அதனை நான் வாங்கிவிட்டேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தை ஏமாற்றும் நோக்கத்தில் முன்னுக்குப்பின் முரணாக முகவரிகளை மாற்றி பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.